C.C 221/2020

PW 1

பெயர் – முருகன்

தேதி 06.08.2024

**(எதிரி ஆஜர். )**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களைத்தான் புகார் மற்றும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரியின் பாட்டியும், என்னுடைய பாட்டியும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். பாட்டியின் சொத்து சம்மந்தமாக எதிரிக்கும் எங்களுக்கும் தனித்தனியாக பிரித்துக் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். எங்களது வீட்டிற்கு முன்பு சடையாண்டி கோவில் உள்ளது என்றாலும், அது எங்களுக்கும் எதிரிக்கும் பொது பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். ஊர் மக்களும் கும்பிடுவார்கள். சடையாண்டி கோவில் இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்திருந்தேன் என்றும், அதை கேட்பதற்காக எதிரி வந்தார் என்றும், அவருடன் நான்தான் சண்டைபோட்டேன் என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பை அகற்ற சொன்னதற்கு நானாக காயத்தை ஏற்படுத்திக்கொண்டு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை கத்தியாக குத்தியதாக கூறியுள்ளேன் என்ன வகை கத்தி என்றால், சுருள் கத்தியாகும். அதன் நீளம் அகலம் எனக்கு ஞாபகம் இல்லை சம்பவம் நடந்தது இரவு ஆகும். சம்பவத்திற்கு பின்பு மருத்துவமனையில் வைத்து எனது மகள் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு செல்லும்போது இரவு 12.00 மணி இருக்கும். என்னை குத்தியதாக சொன்ன நேரம் இரவு 10.00 மணி என்றால் சரிதான். போலிசார் அன்றையதினம் இரவில் மருத்துவமனைக்கு வந்தார்கள் நேரம் எனக்கு ஞாபகம் இல்லை நான் மயக்கத்தில் இருந்தேன். போலிசார் என்னிடம் புகாரில் கையெழுத்து வாங்கினார்கள். போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்றால் வழக்கு சம்மந்தமாக எழுதியிருந்தார்கள். நான் கூறுவதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சடையாண்டி கோவில் நிலத்தை நான் ஆக்கிரமிப்பு செய்திருந்ததை கேட்டதற்கு நானாக காயத்தை ஏற்படுத்திக்கொண்டு பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.